

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.07.2025) "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை, கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து நேற்று (15.7.2025) மண்டலம்6, ஸ்ட்ராஹன்ஸ் சாலையில் உள்ள வி.க.நகர் மாநகராட்சி மண்டல அலுவலக வளாகத்தில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்து, பின்னர் சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, புளியந்தோப்பு காவல் துணை ஆணையாளர் கே.முத்துகுமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், தாவூத்பீ, யோகபிரியா, அமுதா, .ஶ்ரீதணி, .புனிதவதி எத்திராஜன், தமிழ்ச்செல்வி, சரவணன், அம்பேத்வளவன், மண்டல அலுவலர் சரவணன், செயற்பொறியாளர் சதீஷ், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.





திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம், திருநின்றவூர் நகராட்சிகுட்பட்ட பகுதியில், நீர்வளத் துறை சார்பில் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அருகில் ஏற்படும் வெள்ள நீரினை வெளியேற்ற மூடுகால்வாய் அமைக்கும் பணியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி பணிகளை கொடியேசைத்து தொடங்கி வைத்தார் உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், திருநின்றவூர் நகர்மன்றத் தலைவர்உஷாராணி ரவி,நகர கழகச் செயலாளர் தி.வை.ரவி, உஷாராணி ஆவடி மாநகர காவல் துணை ஆணையர் ஐமன் ஜமால், நகராட்சி ஆணையர் கீர்த்தனா, கொசஸ்தலையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் செல்வகுமார், உதவி செயற்பொறியாளர் ஜான் தேவகுமார், உதவி பொறியாளர் உஷா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# நாகர்கோவிலில் பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!



கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளை ஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்கான சமூக வலைதளப் பயிற்சி மாவட்ட கழகச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தலைமையில், இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைதள தன்னார்வலர் விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் பயிற்சி அளித்தனர். மாறிவரும் அரசியல் சூழலுக்கேற்ப சமூக வலைதளத்தைப் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் இந்நிகழ்வில் எடுத்துரைக்கப்பட்டது.

# ஆயிரம்விளக்கு கலைஞர் நூலகத்தில் மாணவர் வாசகர் சந்திப்பு!





முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாளையொட்டி, சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 14.07.2025 அன்று 113வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் தே.சிலம்பரசன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு, வாசிப்பின் அவசியம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான கலைஞர் இயக்கவியல் புத்தகம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜே.எம்.எச்.இம்ரான், என்.மோகன் வேல், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி அமைப்பாளர் புவனேஷ் ஶ்ரீவட்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் தலைமை! டி.எம்.செல்வகணபதி எம்.பி. முன்னிலை!

# சேலம் மத்திய மாவட்டம் சார்பில் - கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - சூர்யா வெற்றி கொண்டான் சிறப்புரை!

சேலம், ஜூலை 16 -

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (16.07.2025 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில், கோட்டை மைதானத்தில் நடைபெறுகிறது.

செவ்வாய்பேட்டை பகுதிக் கழகச் செயலாளர் சி.பிரகாஷ் வரவேற்புரை ஆற்றுகிறார்.

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத் துறை இணைச் செயலாளர் சூரியா வெற்றி கொண்டான் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி முன்னிலை வகிக்கிறார்.

தலைமைக் கழக தொகுதி பார்வையாளர்கள் இ.ஜி. சுகவனம், பார். இளங்கோவன், ஏ.ஆர்.விவேக், சா. இராஜசேகர் மற்றும் ஜி. கே.சுபாசு, மு.கார்த்திகேயன், ஏ.இராமச்சந்திரன், எஸ்.ஆர்.பார்த்திபன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாநகர வட்டச் செயலாளர்கள், மாவட்ட மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள், சேலம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள், பாக முகவர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கோட்டை பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.சையத் இப்ராஹிம் நன்றியுரை ஆற்றுகிறார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனை புதிய கட்டிடத்தில் மருத்துவ சேவையை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் நோயாளிகளுக்கு இனிப்பு வழங்கி வரவேற்று மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டார் அருகில் நகர கழகச் செயலாளர் வி. வினோத் குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தேவன், உதவி செயற்பொறியாளர் முரளி, தலைமை மருத்துவ அலுவலர் விஜய் ஆனந்த், மருத்துவ அலுவலர் அம்பிகா சண்முகம் நிர்வாகிகள் ஜி. எஸ். கணேசன்,கே.எஸ். அசோக்குமார், டி.எஸ். ஷியாம் சுந்தர், குமரன், ரேணுகுமார், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் மாவட்டம் – திருவேற்காடு

# ஆவடியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் தொடக்கம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முகாமினைப் பார்வையிட்டார்!

திருவள்ளூர் ஜூலை 16;

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தை நேற்று தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில், திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட, வீரராக வபுரம், தனியார் திருமண மண்டபத்தில் மற்றும் ஆவடி அடுத்த மிட்டின மல்லி அரசு சமுதாயம் கூடத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் ஆகியோர் நேற்று உங்களுடன் ஸ்டாலின் முகாமினை பார்வையிட்டு பொதுமக்களின் குறைகளை உடனடியாக தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

பின்னர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் செய்தியாளரிடம் கூறியதாவது:

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின் என்ற மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில்

நகர்ப்புறப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 13 துறைகள் 43 சேவைகள்

ஊரகப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 15 துறைகள் 46 சேவைகள்

மக்கள் எளிதாக பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 389 முகாம்கள் துவங்கி இருக்கின்றன. இதில் இன்று முதற்கட்டமாக 120 முகாம்கள் மாவட்டம் முழுவதும் தொடங்கியுள்ளது. இந்த முகாமில் பதிவு செய்து 45 நாட்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்கள் இந்த முகாமில் மனுச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்களின் தேவைகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான தீர்வுகளை இன்னும் 45 நாட்களில் இங்கு பெறப்பட்ட மனுக்களில் நிறைவு செய்யப்படும் என்று அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், திருவேற்காடு நகர் மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி,மண்டல குழு தலைவர்கள் அம்மு விஜயன், ஜோதிலட்சுமி, மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி செயலாளர்கள் பொன்.விஜயன், ஜி. ராஜேந்திரன், ஆவடி மாநகராட்சி பணிக்குழு தலைவர் சா.மு.நா.ஆசிம்ராஜா,

ஆவடி மாநகராட்சி ஆணையர்சரண்யா மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை.ஜெயகுமார், ஆவடி மாநகர காவல் துணை ஆணையர் ஐமன் ஜமால், துணைத் தலைவர் ஆனந்தி ரமேஷ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் அ.சேகர், டாஸ்மாக் மாவட்ட மேலாளர் முத்துராமன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் டாக்டர் அம்பிகா சண்முகம், மாவட்ட சுகாதார அலுவலர்கள் டாக்டர் பா.பிரியா ராஜ், டாக்டர் பிரபாகர், உதவி ஆணையர் தமிழ்ச்செல்வி, பூந்தமல்லி வட்டாட்சியர் சரஸ்வதி, நகராட்சி ஆணையர் என்.தட்சணாமூர்த்தி, அரசு வழக்கறிஞர் கேபி புரட்சி தாசன், திமுக நிர்வாகிகள் எஸ்.சங்கர், ஜி.விமல் வர்ஷன்,

ஜெ.மகாதேவன், ஏ. ஜெ.பவுல், வழக்கறிஞர் பெ.வினோத் , பி.வி.கே. கண்ணன், துரை கோபால், பி.உமாபதி, கே.பி.எஸ்.சுதாகர், குமார், சாது, ஜெகன், என்.ராஜி, இளங்கோவன், அப்பு(எ) ஜெபராஜன், , ஆ.நாராயணன், மு.நரேஷ், குடியரசு, ராஜா, அமலேஷ்வரி, மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரவாயல் - 143 -வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

## காரம்பாக்கம் கா.கணபதி எம்.எம்.எல்.ஏ. பங்கேற்பு

சென்னை, ஜூலை 16 -

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு 143, முகப்பேர் மேற்கு, வேலம்மாள் ஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் பகுதி கழக செயலாளரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி, நேரில் வந்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை மாவட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு143, முகப்பேர் மேற்கு, வேலம்மாள் ஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் நேற்று (15.07.2025) காலை 9.30 மணியளவில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.கர்னல், தீ. பாலாஜி, எம்.ஏ. செந்தில்சுரேஷ், எஸ்.பாரதி, , வட்ட கழக செயலாளர்கள் எஸ். ஜி.மாதவன், எம்.கே.பி. அண்ணாதாசன், எம்.எம். ஜெயரத்தினம், எம்.ரூபன், ப.ஆலன், மாமன்ற உறுப்பினர்கள் எம்.இ.ஸ்டாலின், , ரமணி மாதவன், , சாந்தி ராமலிங்கம், மாவட்ட பிரதிநிதிகள் எழிலரசன், எம். ஆர்.சதீஷ், கோ.ராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.






சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு143, முகப்பேர் மேற்கு, வேலம்மாள் ஹாலில் நேற்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, பகுதி நிர்வாகிகள் ஆர்.கர்னல், தீ.பாலாஜி, செந்தில்சுரேஷ், எஸ்.பாரதி, வட்டச் செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், எம்.ரூபன், ப.ஆலன், மாமன்ற உறுப்பினர்கள் எம்.இ.ஸ்டாலின், ரமணி மாதவன், சாந்தி ராமலிங்கம், மாவட்ட பிரதிநிதிகள் எழிலரசன், சதீஷ், கோ.ராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.